தமிழ்நாடு அரசு பதிவுத்துறைத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள், சென்னை 28.

முன்னிலை. திரு.பிரதீப் யாதவ்,இ.ஆ.ப.,

.....

பதுத எண்.21236/இ1/2001 நாள் 4 .2.2003.

.....

பொருள்: பதிவு நடைமுறை ஆவணங்கள் பதிவு- தவறான பதிவுகள், ஆள் மாறாட்ட பதிவுகள் - தடை செய்தல் அறிவுரை வழங்கப்பட்டது.

பார்வை: பதிவுத்துறைத்தலைவர் கடித ண்.21236/இ1/2001 நாள் 24.01.2003

ஆணை:

பார்வையில் கண்ட ஆணையை தொடர்ந்து கீழ்க்கண்ட தெளிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1. ஒரு ஆவணத்தை குடும்ப உறுப்பினர்கள் எழுதித்தரும் நிலையில், இதற்கான அடையாள நெறிமுறையில் உணவு பங்கீடு அட்டையில் குடும்பத் தலைவர் புகைப்படம் மட்டும் இருக்கும். குடும்ப தலைவரால் அடையாள அட்டை தாக்கல் செய்யப்படுங்கால் ஆவணத்தை எழுதித்தரும் உணவு பங்கீட்டு அட்டையில் உள்ள இதர குடும்ப உறுப்பினர்களை பொறுத்து குடும்பத் தலைவர் அவர்களை அடையாளம் காட்டும் நிலையில் மற்றவர்கட்கு தனித்தனியே அடையாள அட்டை கோர வேண்டியதில்லை.
2. பார்வையில் கண்ட ஆணையில் கூறப்பட்ட 13 இனங்களுக்கு கீழ் ‘‘வரிசை எண்.14’’ ஆக வாகன உரிமை சான்று ‘R.C.Book’ சேர்க்கப்படுகின்றது.
3. வரையறுக்கப்பட்ட அடையாள அட்டையில் உள்ள பெயர் எழுத்துகளில் உள்ள தட்டச்சு பிழை, ஆவணத்தில் தற்போது முகவரி மாற்றம் ஆகிய காரணங்களுக்காக மறுப்பு கூறுதல் கூடாது.
4. பார்வையிற் கண்ட நெறிமுறைகளுடன் இத்தெளிவுரைகளையும் சேர்த்து செயல்பட அறிவிக்கப்படுகிறது.

இந்த ஆணை வரப்பெற்றதை துணைத் தலைவர்கள், பதிவுத்துறை தலைவருக்கும், மாவட்டப் பதிவாளர்கள் துணைத் தலைவர்கட்கும், சார்பதிவாளர்கள் மாவட்டப் பதிவாளர்கட்கும் ஒப்புதல் உடன் அளித்திடல் வேண்டும்.

ஒம்.

பதிவுத்துறைத்தலைவர்/4.2.03

/ஆணைப்படி/

பதிவுத்துறைத் தலைவருக்காக,

பெறுநர்

அனைத்து துணைத் தலைவர்கள்
மாவட்டப் பதிவாளர்கள், (நிர்), (த)

Verified by RealEstate™